**தலைப்பு 254 – பதிவாளர் நாயகம் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 19 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) உப பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அறிக்கையில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஆண்டினுள் இயந்திரம், உபகரணங்கள் ஆகியவற்றின் கொள்வனவு பெறுமதி ரூபா 51,301,152 ஆன போதிலும், நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் அந்த சொத்துக்களின் கொள்வனவுப் பெறுமதி ரூபா 37,826,537 ஆனமையால் ரூபா 13,474,615 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | 2021 ஆம் ஆண்டின் செலவினமாக இனங்காணப்பட்டுள்ள போதிலும், குறித்த பொருட்கள் 2022 ஆம் ஆண்டிலேயே கிடைத்துள்ளமையால், அது 2021 ஆம் ஆண்டின் நிதியல்லாத சொத்தொன்றாக இனங்காணப்பட்டிராமையால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. அந்த வேறுபாடு சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்திற்கு தரவுகளை உள்ளீடு செய்யும் போது ஏற்பட்டுள்ள தவறொன்று என்பதால் அதனை திருத்துவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் முகாமைத்துவத்தினை முறைமைப் படுத்தல். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2015 யூலை 20 ஆந் திகதிய அரச நிதி கொள்கைகள் சுற்றறிக்கை | அரச நிதிக் கொள்கைகள் திணைக்களத்திற்கு இந்த அறிக்கையின பிரதியொன்றை | சம்பந்தப்பட்ட துறைகளுக்கு வருமான |

| | | | |
|---|---|---|---|
| | இலக்கம் 01/2015 இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம், இந்த திணைக்களத்தினால் அரையாண்டு வருமான அறிக்கைகள் உரிய காலப்பகுதி நிறைவடைந்த ஆண்டு முதல் 15 நாட்களினுள் அரச நிதிக் கொள்கைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுப்புவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | அறிக்கைகளை துல்லியமாக சமர்ப்பித்தல். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 491 இன் பிரகாரம், பெறுநரல்லாத ஒவ்வொரு திணைக்களமும் முகப்புக் கடித அமைப்பில் மாதாந்த கூற்றின் தயாரித்து , அந்த கூற்று கிடைக்க வேண்டிய மாதத்துடன் அதற்கடுத்த மாதத்தின் 15 அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், 70 அலுவலக கிளைகளை கொண்ட இந்த திணைக்களத்தின் மீளாய்வாண்டின் போது 840 அறிக்கைகள் கணக்காய்வுக்கு வழங்கப்பட வேண்டிய போதிலும், 61 அறிக்கைகள் மாத்திரம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 491 இன் பிராகரம் 'லெட்டர் ஹெச்' மாதிரியில் மாதாந்த கூற்றுக்கள் எதிர்காலத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறித்த அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு உரிய முறையில் சமர்ப்பிக்க வேண்டியமை. |
| (இ) | அலுவலக கிளைகளிலிருந்து பெற வேண்டிய 840 மாதாந்த வருமான வகைப்படுத்தல் அறிக்கைகளில் 213 அறிக்கைகள் மாத்திரம் கணக்காய்வுக்கு வழங்கப்பட்டமையால் 2021 ஆம் ஆண்டின் போது திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்ட பதிவுக் கட்டண வருமானங்கள் சரியானது என்பதாக சான்றுபடுத்துவதற்கு | குறித்த காணிகள் பதிவாளர் அலுவலகத்தினால் உரிய திகதிகளில் அந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் அந்நிலைமை ஏற்பட்டுள்ளது. | குறித்த அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு உரிய முறையில் சமர்ப்பிக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வில் முடியாதிருந்தது. | | |
| (ஈ) | நிதிப்பிரமாணம் 128(2) இன் பிரகாரம் தமது கடப்பாட்டில் உள்ள பல்வேறு வருமானத் தலைப்புகள் உப தலைப்பு விடயங்கள் மற்றும் உப தலைப்பு விடயங்களின் கீழான ஒவ்வொரு நிதியாண்டினதும் யூன் 30 ஆந் திகதி மற்றும் திசெம்பர் 31 ஆந் திகதியில் நிலுவை அரச வருமானம் தொடர்பான நிலைமையை காண்பிக்கும் அரையாண்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் அந்த அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு இந்த அறிக்கைகளை எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தொடர்புடைய பிரமாணங்கள் பின்பற்றப்பட வேண்டியமை. |
| (உ) | 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஆண்டின் ஆரம்பத்தில் நிலுவை வருமானத்தின் பெறுமதி ரூபா 26,723,078 ஆன போதிலும் திணைக்களத்தின் நிலுவை வருமான அறிக்கைகளின் பிரகாரம் இப்பெறுமதி ரூபா 13,921,038 ஆனமையால் ஆண்டின் ஆரம்ப நிலுவை வருமானப் பெறுமதியின் ரூபா 12,802,040 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. அதற்கமைய ஆண்டின் இறுதியில் உள்ளபடியான நிலுவை வருமானம் அப்பெறுமதியினால் மாற்றமடைந்திருந்தது. | காணிப் பதிவாளர் அலுவலகத்தினால் தவறான அடிப்படையொன்றின் கீழ் இந்த திணைக்களத்திற்கு உரித்தற்ற வருமானம் (நிலுவை வருமானம்) அறிக்கையிடப்பட்டமையால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. | சரியான அறிக்கைகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டியமை. |

## 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காணிகள் அமைச்சினால் உரித்தினை பதிவு செய்யும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக வழங்கிய நிதியேற்பாடானது எப்பணியில் ஈடுபடுத்தப்பட்டது என்பதை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட விரிவான திட்டமொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் அந்நிதியேற்பாடுகளின் உரித்தினை பதிவு செய்தல் அலுவலகங்களில் ரூபா 31,244 ஆன தொலைபேசி செலவினத்தை செலுத்தி செலவின விடயம் 2509 இன் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | காணிகள் அமைச்சினால் இந்த திணைக்களத்தில் நடைமுறைப்படுத்தப்படும் உரித்தினை பதிவு செய்யும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக 116-2-6-10-2509 இன் கீழ் நிதியேற்பாடு வழங்கப்படுவதுடன் அந்நிதியேற்பாடுகளின் ஊடாக காணிகள் பதிவாளர் அலுவலகங்களில் பேணப்படும் உரித்து பதிவு செய்யும் அலுவலகங்களின் செலவினங்கள் மேற்கொள்ளப்படும். | செலவின முகாமைத்துவம் முறைமைப் படுத்தப்பட வேண்டியமை. |
| (ஆ) | பேரேட்டின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டின் ஏனைய செலவினங்களின் கூட்டுத்தொகை ரூபா 226,056,531 ஆன போதிலும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் (ACA – ii (i)) அப்பெறுமதி ரூபா 243,439,341 ஆனமையால் ரூபா 17,382,810 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | செலவின பேரேடு திறைசேரியின் கணனி அச்சீடுகளுடன் ஒப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு தரவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது. | செலவின பேரேடுகளின் தரவுகளை சரியாக உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (இ) | மீளாய்வாண்டின் 07 செலவின விடயங்களின் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளில் 25 சதவீதம் முதல் 83 சதவீதம் வரையான வீச்சில் சேமிப்புக்கள் நிலவின. | ஆண்டினுள் குறித்த பணிகளை மேற்கொள்ளும் போது பல்வேறு காரணங்களின் அடிப்படையில் மதிப்பீட்டின் செலவினங்களை மேற்கொள்வதற்கு தேவை ஏற்படுவதில்லை. அவ்வாறான சந்தர்ப்பங்களில் அம்மதிப்பீடுகளின் நிதியேற்பாடு எஞ்சியுள்ளது. | செலவின முகாமைத்துவம் முறைமைப் படுத்தப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | செலவின விடய இலக்கம் 254-1-2-1404 இன் கீழ் குத்தகை வாடகை மற்றும் உள்ளூராட்சி நிறுவன வரி ஆகியவற்றுக்காக குறைநிரப்பு நிதியேற்பாடாக ரூபா 12,600,000 ஒதுக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் இறுதியில் உள்ளவாறு அக்குறைநிரப்பு நிதியேற்பாட்டின் 89 சதவீதம் அல்லது ரூபா 11,192,023 எஞ்சியிருந்தது. | உரிய முறையில் பட்டியல்களை சமர்ப்பிக்காமை மற்றும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டியல்களுக்கு போதிய கட்டுநிதி கிடைக்காமையால் கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியாதிருந்தமையால் இந்நிலைமை உருவாகியுள்ளது. | செலவின முகாமைத்துவம் முறைமைப் படுத்தப்பட வேண்டியமை. |
| (உ) | பேரேட்டின் பிரகாரம் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை சுவீகரிக்கும் செலவினம் ரூபா 5,359,928 ஆன போதிலும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 18,834,553 ஆனமையால் ரூபா 13,474,615 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | பேரேட்டின் பிரகாரம் இயந்திரம் மற்றும் உபகரணங்களை சுவீகரிக்கும் செலவினம் ரூபா 5,359,938 ஆக காணப்படுவதுடன் ஆண்டின் இறுதியில் உள்ளபடியாக திறைசேரியினால் இந்த இயந்திரம் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்யும் செலவின விடயத்திற்காக ரூபா 13,474,615 ஆன தொகை வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் சரியான தரவுகளை உள்ளடக்க நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஊ) | போக்குவரத்து செலவினம், பிரயாணச் செலவினம், எரிபொருள், வாகனப் பராமரிப்பு மற்றும் வாடகை செலுத்துதல் போன்ற செலவினங்களுக்காக திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட செலவின விடயங்கள் காணப்பட்ட போதிலும் அச்செலவின விடயங்களுக்குரிய ரூபா 3,434,884 செலவின விடய இலக்கம் 1409 ''ஏனைய செலவினங்கள்'' இல் உள்ளடக்கப்பட்டிருந்தது. | குறித்த செலவினத்தை மேற்கொள்ளும் தேவைப்பாட்டின் அடிப்படையில் நிதியேற்பாடு உள்ள ஏனைய செலவின விடயத்திற்கு வரவு வைக்கப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவதுடன் நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் அல்லது மேலதிக நிதியேற்பாட்டினை பெற்று அதன் மூலம் சீராக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் சரியான முறையில் செலவினங்களை வகைப்படுத்த வேண்டியமை. |

## 2.3 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஏற்படுத்தப்படல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டு எல்லையினை விஞ்சி ரூபா 49,123,684 கூட்டுத்தொகையான கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்த 07 சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன. | திணைக்களத்தின் அத்தியவசியமான கடமைகளை நிறைவேற்றுவதற்கான செலவினங்களை தீர்க்கும் பொறுப்பு திறைசேரியினால் மேலதிக நிதியேற்பாடு வழங்குதல், நிலவும் செலவின விடயங்களில் நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் மாற்றல் மற்றும் நிதிப்பிரமாணம் 115 இன் கீழ் கொடுப்பனவு மேற்கொள்வதற்குரிய அங்கீகாரத்தின் கீழ் குறித்த செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | நிதியேற்பாட்டினை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்தப்படக் கூடாது. |
| (ஆ) நிதிக்கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களின் பெறுமதி மற்றும் சிகாஸ் கணக்கீட்டு முறைமையில் உள்ளடக்கப்பட்டிருந்த பொறுப்புக்களின் பெறுமதி ஆகியவற்றுக்கிடையே ரூபா 43,570,334 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | கணக்காண்டின் இறுதியில் கொடுப்பனவுகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் சிகாஸ் கணக்கீட்டு நடைமுறைக்கு உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அத்திகதியில் கிடைத்த பொறுப்புக்களும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப் பட்டுள்ளமையால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் உள்ள பெறுமதிகள் திறைசேரியின் கணனி அச்சீட்டு வெளியீட்டுடன் இணங்க வேண்டியமை. |
| (இ) 2022 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 337,419 கூட்டுத்தொகையான செலவினங்கள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்களாக காண்பிக்கப்பட்டிருந்தது. | குறித்த கொடுப்பனவுகளுக்காக பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அப்பட்டியல்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுகளின் காலப்பகுதியை கருத்தில் கொள்ளாது நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளமையால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. | பொறுப்புக்கள் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ரூபா 200,000 ஆன குத்தகை வாடகை பொறுப்பு பெறுமதி நிதிக்கூற்றுக்களில் இரு தடவைகள் பதிவு செய்யப்பட்டிருந்தது. | செலுத்திய பொறுப்புக்கள் மற்றும் செலுத்தப்படாத பொறுப்புக்களாக நிதி அறிக்கைகளில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் ரூபா 200,000 ஆன பொறுப்புக்கள் அவ்இரண்டு அறிக்கைகளிலும் தவறுதலாக உள்ளடங்கியுள்ளது. | பொறுப்புக்கள் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டியமை. |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு தரப்பட்டுள்ளன.

**அவதானிப்புக்கள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(2) பிரிவு | - | 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | அனைத்து பிரதேச அலுவலகங்களினதும் தகவல்களை வரவழைத்து உரிய தகவல்கள் இதுவரையிலும் பகுப்பாய்வு செய்யப்பட்டவாறு உள்ளதுடன் 2022 யூன் மாதத்தின் இறுதிக்கு முன்னர் வரைபு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படும். | தொடர்புடைய அதிகாரச் சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டியமை. |
| (ஆ) | நிதிப்பிரமாணம் | | | | |
| (I) | நி.பி. 225(1), (4) | - | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை தயாரிக்கும் போது அதில் திகதிகள் குறிப்பிடப்பட்டிராத சந்தர்ப்பங்கள் மற்றும் கொடுப்பனவு உறுதிச்சீட்டினை தயாரிக்கும் மற்றும் அதிலுள்ள தவறுகளை ஆராயும் உத்தியோகத்தர்கள் | திணைக்களத்தின் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களின் எண்ணிக்கையானது பொருண்மையான அளவில் உயர் எண்ணிக்கையை கொண்டுள்ளமையால் இந்நிலைமை உருவாகியுள்ளது. | - மேற்படி - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | அதில் சிறு கையொப்பம் வைத்திராத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | | |
| (II) | நி.பி. 1646 | - | திணைக்களத்திற்குச் சொந்தமான 22 வாகனங்களின் ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிராததுடன் 17 வாகனங்கள் 01 முதல் 05 மாதங்கள் வரையான காலத்திற்காக மாத்திரம் ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | கொவிட் தொற்று நோய் நிலைமை காரணமாக திணைக்களத்தின் பிரதேச அலுவலகங்களிலிருந்து ஓட்ட பதிவுகள் உரிய முறையில் பெற்றுக் கொள்வதற்கு முடியாதுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டில் உரிய முறையில் அனைத்து வாகனங்களினதும் ஓட்டக் குறிப்புக்கள் பெற்றுக் கொள்ளப்படும். | தொடர்புடைய பிரமாணத்திற்கு இணங்க செயற்பட வேண்டியமை. |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் 04 ஆம் பந்தி | - | பெறுகைகள் திட்டத்திற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிராததுடன் விரிவான பெறுகைகள் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2022 ஆம் ஆண்டின் போது சரியான அனுமதிகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. | - மேற்படி - |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | | | | |
| (I) | 3.1 ஆம் பந்தி | - | ஒவ்வொரு கணனி பரிசோதனையினதும் 12 மாதங்கள் கடந்த பின்னர் அல்லது 25,000 கிலோமீற்றர்கள் தூரம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட பின்னர் அல்லது என்ஜின் தொடர்பில் பிரதான பழுதுபார்த்தலொன்றின் பின்னர் ஆகியவற்றில் முதலில் ஏற்படும் | கொவிட் தொற்று நோய் நிலைமை காரணமாக எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ள முடியாதுள்ளது. 2022 ஆம் ஆண்டின் போது எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | சந்தர்ப்பத்தின் பின்னர் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்திற்குச் சொந்தமான 41 வாகனங்களுக்காக 2021 ஆம் ஆண்டின் போது எரிபொருள் பரிசோதனையொன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | | |
| (II) | 5 ஆம் பந்தி | - | வாகன சம்பவக் குறிப்புக்களில் நாள்தோறும் மேற்கொள்ளப்படும் எரிபொருள் பயன்பாடு மற்றும் ஓட்டத்தில் ஈடுபடுத்திய தூரம் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | வாகனங்களின் சம்பவக் குறிப்பு புத்தகங்கள் நாளதுவரை யாக்குதல் இடம்பெறுகின்றது. | தொடர்புடைய சுற்றறிக்கைக்கு இணங்க செயல்பட வேண்டும். |

## 2.5 முற்பணங்களை வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு செய்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கட்டுநிதிகளை வெளியிட்டு உரிய பணி நிறைவடைந்து 10 நாட்களினுள் மீண்டும் கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும் அதற்கான தீர்ப்பனவு தாமதக் காலமானது 3 முதல் 89 நாட்கள் வரை வியாபித்திருந்த 7 சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக குறித்த பணிகளை உரிய நேரத்தில் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தமை மற்றும் குறித்த கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தபால் மூலம் சமர்ப்பிப்பதில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. | கட்டுநிதி முகாமைத்துவம் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய அங்கீகாரங்களை பெற்றுக் கொள்ளாது மத்திய பதிவேட்டு அறையின் பழுதுபார்த்தல் பணிகளுக்காக உத்தியோகத்தர் ஒருவருக்கு ரூபா 150,000 ஆன முற்பணமொன்று வழங்கப்பட்டிருந்தது. | குறித்த எல்லையினை விஞ்சி முற்பணத்தை செலுத்துவதற்காக திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளுதல் தவறுதலாக மேற்கொள்ளப்பட முடியாதிருந்தது. | முற்பணக் கட்டுப்பாடு உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |
| (இ) | 01 முதல் 30 வருடங்கள் வரையான காலப்பகுதியினுள் மரணமடைந்த, ஓய்வு பெற்றுச்சென்ற, பணி வறிதாக்கப்பட்ட, சேவையை கைவிட்டுச் சென்ற மற்றும் சேவை வறிதாக்கப்பட்ட 48 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 2,735,515 கூட்டுத்தொகை 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுக்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பதில் கிடைத்திருக்கவில்லை. | செயற்திறனாக கடன் மீதிகளை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் அதன் செயல்முன்னேற்றம் தொடர்பான அறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்களுடன் இணைந்ததாக இனங்காண முடியாதிருந்தது. | அவதானிப்புக்களுக்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பதில் கிடைத்திருக்கவில்லை. | நிறுவனத்தின் திட்டங்கள் மற்றும் அதன் செயன் முன்னேற்றம் தொடர்பிலான அறிக்கைகள் உரிய முறையில் தயாரிக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளின் செயல் முன்னேற்றம் ஆண்டின் இறுதியில் வழங்கிய செயல்முன்னேற்ற அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | அவதானிப்புக்களுக்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பதில் கிடைத்திருக்கவில்லை. | - மேற்படி - |

### 3.2 பெறுகைகள்

--------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் அச்சீட்டுப் பிரிகளை பெற்றுக்கொள்ளும் சேவை உடன்படிக்கை (ரூபா 63 மில்லியன்) 2021 மே மாதத்தில் நிறைவடைந்ததுடன் புதிய வழங்குனர் ஒருவரை தெரிவு செய்வதற்காக விலைக்கேள்வி மதிப்பீட்டுத் திகதிகள் 3 சந்தர்ப்பங்களில் மாற்றப்பட்டு பத்திரிகை அறிவித்தலொன்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதற்காக திணைக்களத்தினால் முறையே ரூபா 88,020 மற்றும் ரூபா 33,696 மற்றும் ரூபா 63,720 படியாக செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | தவிர்க்க முடியாத காரணங்களின் அடிப்படையில் விலைக்கேள்வி திறக்கும் திகதிகள் நீடிக்கப்பட்டுள்ளதுடன் பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு விலைக் கேள்வி கோரப்பட்டுள்ளமையால் நாட்களை நீடிப்புச் செய்தல் தொடர்பில் பத்திரிகை மூலம் அறிவிக்க நேர்ந்துள்ளது. | செலவினக் கட்டுப்பாடு உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |
| (ஆ) | தலைமை அலுவலகத்தின் பயன்பாட்டிற்காகவும் கிளை அலுவலகங்களில் பகிர்ந்தளிப்பதற்காகவும் 150 எழுதுவினைஞர் கதிரைகள் 75 எழுதுவினைஞர் மேசைகளை கொள்வனவு செய்யும் போது ரூபா 3,367,980 பெறுமதியான பெறுகைகளுக்காக 14 நாட்களுள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய செயலாற்றல் பிணை திணைக்களத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்டிராததுடன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ''ஆ'' | இந்த பெறுகைகளுக்குரிய செயலாற்றல் பிணையை பெற்றுக்கொண்டிராததுடன் எதிர்காலத்தில் குறித்த குறைபாட்டினை நிவர்த்தி செய்வதற்கும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகை நடவடிக்கைகள் உரிய மேற்கொள்ளப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் உரிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. | | |
| (இ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.10 ''ஆ'' பிரகாரம் விலைக்கேள்விகளில் செல்லுபடியான காலத்தினுள் விலைக்கேள்வியை மதிப்பீடு செய்வதற்கும் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டிய பொதிலும் மேற்படி பெறுகைகளுக்குரியதாக முன்பெறுகை நடவடிக்கைகள் விலைக்கேள்வி பிணைமுறியின் காலத்தினுள் நிறைவு செய்ய முடியாதிருந்ததுடன் வழிகாட்டிக் கோவையின் 7.5.1 இன் பிரகாரம் விலைக்கேள்வி பிணையின் செல்லுபடிக் காலம் நீடிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | கொவிட் 19 தொற்றுநிலைமை காரணமாக அலுவலகப் பணிகளை உரிய முறையில் செயற்படுத்த முடியாதிருந்தமையால் விலைக்கேள்விகளின் செல்லுபடியான காலத்தினுள் ஒப்பந்தத்தை கையளிக்க முடியாதிருந்தது. | பெறுகை நடவடிக்கைகள் உரிய மேற்கொள்ளப்பட வேண்டியமை. |
| (ஈ) | 2006 அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.6.1(ii) மற்றும் (iv) பிரகாரம் அமைப்புக் குறிப்பீடுகள் மற்றும் விலைக்கேள்வி அழைப்பு ஆவணங்கள் மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரித்தல் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பணிப்பொறுப்பான போதிலும் 2021 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட பெறுகைகள் தொடர்பில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அப்பணிப்பொறுப்பு நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | சிறிய பெறுகை நடவடிக்கைகளில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் விலைக் கேள்வி ஆவணங்கள் மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படுவதில்லை. | பெறுகை நடவடிக்கைகள் உரிய மேற்கொள்ளப்பட வேண்டியமை. |
| (உ) | தனியார் நிறுவனமொன்றிடமிருந்து 26 அச்சீட்டு இயந்திரங்களை கொள்வனவு செய்யும் போது செல்லுபடியான காாலம் கடந்த பின்னர் விலைக்கேள்வி கையளிக்கப்பட்டிருந்த | இக்காலத்தில் நிலவிய கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக அலுவலகத்தினை உரிய முறையில் செயற்படுத்த முடியாமையின் காரணத்தால் பெறுகை நடவடிக்கைகள் தாமதமடைந்ததுடன் | பெறுகை நடவடிக்கைகள் உரிய மேற்கொள்ளப்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| மையால் சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்விகளுக்கு அச்சீட்டு இயந்திரங்களை கொள்வனவு செய்ய முடியாதிருந்தது. | விலைக்கேள்வி கையளிப்பும் தாமதமடைந்துள்ளது. பின்னர் ஏற்பட்ட சந்தை விலைகளின் தளம்பல் காரணமாக கையளிக்கப்பட்ட விலைக்கு பெற்றுக் கொள்ள முடியாதுள்ளதாக நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நிதியல்லாத சொத்துக்களின் சொத்துக்கள் தொகுதி 09 இன் இறுதி மீதி மற்றும் 2021 ஆம் ஆண்டின் ஆரம்ப மீதி ஆகியவற்றுக்கிடையே ரூபா 1,682,845,980 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களின் காணிகளின் மீதிகள் காண்பிக்கப்பட்டிராததுடன் 2021 ஆம் ஆண்டின் ஆரம்பத்தின் காணிகளின் மீதியானது ரூபா 1,558,895,000 ஆகும். | 2020 ஆம் ஆண்டின் CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட விநியோகப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப மீதிகளின் வேறுபாடொன்று நிலவியமையால் ஆரம்ப மீதியாக உள்ளடக்கப்பட்டிராத தகவல்களை மீண்டும் ஆரம்ப மீதியாக உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அப்பணி இதுவரையிலும் நிறைவேற்ற முடியாதுள்ளது. | சொத்துக்களை நிதிக்கூற்றுக்களில் சரியாக உள்ளடக்க வேண்டும். |
| (ஆ) 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்த 6 வாகனங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பழுதுபார்க்கப் பட்டு ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கோ அல்லது முறையான நடவடிக்கை எடுப்பதற்கோ திணைக்களம் தவறியிருந்தது. | கொரோனா தொற்றுநோய் நிலைமை காரணமாகவும் போதிய நிதியேற்பாடு இல்லாதிருந்தமையின் அடிப்படையிலும் குறித்த வாகனம் 2021 ஆம் ஆண்டி இறுதி வரையிலும் பழுதுபார்க்கப்பட்டு ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாதிருந்ததுடன் பொருளாதார பின்னடைவு காரணமாக அவ்வாகனத்தை பழுதுபார்ப்பதற்கு முடியாதிருந்தது. | சொத்துக்களின் முகாமைத்துவம் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தினால் மின்சாரப் பட்டியல்களுக்கு உரிய கொடுப்பனவுகளை தாமதமாக செலுத்தியமையால் மீளாய்வாண்டின் ரூபா 55,637 ஆன மிகைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் தாமதமின்றி மின்சாரப் பட்டியல்களை செலுத்துவதற்கும் வட்டி தொடர்பில் உரிய நிறுவனங்களுடன் கலந்துரையாடி வட்டியை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் அரச செலவினங்கள் முகாமைப் படுத்தப்படல். |

### 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 2812 ஆக காணப்பட்டதுடன் உள்ளபடியான பதவியணி 3229 ஆகக் காணப்பட்டமையால் மிகை மற்றும் வெற்றிடமான பதவியணி முறையே 670 மற்றும் 252 ஆகும். மொத்த மிகைப் பதவியணியும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாவ துடன் பற்றாக்குறை பதவியணி பிரதானமான 06 பதவிகளை உள்ளடக்கிய 17 பதவிகளை கொண்டிருந்தது. | மிகைப் பதவியணியுள் உள்ளடக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளின் எண்ணிக்கையை அங்கீகரித்துக் கொள்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. வெற்றிடமான பதவியணிக்காக ஆட்சேர்க்கும் தேவைப்பாடு தொடர்பில் பொது நிர்வாக அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | மனிதவள முகாமைத்துவம் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |
| (ஆ) திணைக்களத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிரந்தர நியமனத்தை மேற்கொள்ளல் 2021 ஆம் ஆண்டின் சில மாதங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த துடன் 4 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பதிற்கடமை மற்றும் கடமை மேவுகை அடிப்படையில் அதற்கான | கணக்கீட்டு உத்தியோகத்தருக்கான நிரந்தர நியமனம் ஒன்றும் இதுவரையும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - |

உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அந்த ஒவ்வொரு உத்தியோகத்தர்களினதும் சேவைக்காலமானது 01 முதல் 03 மாதங்களுக்கு இடைப்பட்ட அளவில் அவ்வவ்போது மாற்றமடைந்த சந்தர்ப்பங்களும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன் கணக்கீட்டு உத்தியோகத்தருக்காக நிரந்தர நியமனமொன்றை இந்த அறிக்கைத் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.